[1972 சனவரி 29

Theft of electric motors

* 115 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR :- Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a number of persons responsible for the theft of electric motors at various places have been apprehended in Madras City on or about the 10th June 1971; and

(b) if so, whether the motors were recovered?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது சிலைகள் திருடுவது, மின்சாரச் சாதனங்களைத் திருடுவது போன்ற குற்றங்கள் அதிக மாக நடைபெறுகின்றன. ஒயர்களும், மின் கருவிகளும் திருடப் படுவதால், விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரியான திருட்டுகள் நடைபெறாமலிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இத்தகைய திருட்டு கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகச் சிறப்பு சுற்று காவல் துறை யினர் பிரிவு நிறுவப்பட்டு இருக்கிறது. அது சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்படுபவர்கள்மீது கடுமை யான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் குற்றங்கள் நடைபெறாமல் இருக்க, சிறந்த கண்காணிப்புடன் காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் இப்போது ஒயர்கள், மின்சார மோட்டார்கள், இதா மின்சாரப் பொருட்கள் திருடப்பட்டது சம்பந்தமாகப் பல வழக்கு கள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஒயர்கள் திருடுவதை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு மெயின் லைன்களில் ‘சிக்னல்’ கம்பிகள் பொருத்தப்பட்டிருப்பது போல் கிளை லைன்களிலும் ‘சிக்னல்’ கம்பிகள் பொருத்தப்பட்டால் இந்தத் திருட்டுகளைத் தடுக்கலாம். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இருக்கின்ற நிதி நிலையைப் பொறுத்துத்தான் அத்தகைய ஏற்பாட்டினை எல்லா இடங்களிலும் கொண்டுவர முடியும். அதற்கு அதிகச் செலவு ஆகும். அதனால் நிதி வசதிக்கேற்பப் பின்னால் இதுபற்றி யோசிக்கப் படும். இருப்பினும் நான் ஏற்கெனவே கூறியமாதிரி, திருட்டு களைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாலாஜா நகராட்சி பள்ளிகள்

* 116 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1972 சனவரி 29]

(அ) வாலாஜா நகரசபைப் பள்ளிகளை அரசு எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) வாலாஜா நகராட்சி நடத்தும் உயர்நிலைப்பள்ளியை அடுத்த நிதி ஆண்டில் அரசு ஏற்றுக்கொள்ளும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்வதற்கு முன்பே, இப்போதே அங்கு பணப் பற்றுக் குறை இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அரசு அடுத்த ஆண்டு எடுத்து நடத்துவதாக இருந்தாலும், இந்த ஆண்டு பண உதவியை அரசு நீட்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது இந்த ஆண்டு மட்டுமல்ல; சென்ற சில பல ஆண்டுகளாகவே பற்றுக்குறை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளை நடத்துவதில் அந்த நகராட்சி எவ்வளவோ முயற்சி செய்தும், பணப் பற்றுக் குறை தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அடுத்த ஆண்டிலிருந்து அரசே ஏற்று நடத்துவது என்ற முடிவு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

* 117 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சென்ற மே, ஜூன் மாதச்சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை.

(இ) ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மே மாதச் சம்பளம் 19—6—1971-ல் கொடுக்கப்பட்டது. ஜூலை மாத இறுதியில் மூன்று மாதச் சம்பளம் கிடைக்கப்பெறவில்லை என உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்ததன் பேரில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர், வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளரை நேரில் சந்தித்துப் பேசி பணப்பற்றுக்குறையினை நீக்க அரசு மானியம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு (ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஜூன், ஜூலை மாதங்களுக்கான சம்பளமும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் மே, ஜூன், ஜூலை மாதச் சம்பளமும் 6—8—1971 அன்று வழங்கப்பட்டன.